1981 ஏப்ரல் 27]

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் பிரச்னைபற்றி எப்பொழுது பேசப்பட உள்ளது? காவிரி நதிநீர்ப் பங்கீட்டைப்பற்றிய பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டம் எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். (விடை இல்லை).

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, அமைச்சருடைய விவரமான அறிக்கை இந்தியா பூராவும் இருக்கும் ஒரு பொதுவான திட்டம் என்ற அடிப்படையில் இருக்கிறது. குறிப்பாக, நம்முடைய மாநிலத்திலே மழை அதிகம் பெய்கின்ற காலத்திலே, வெள்ளம் வரும் காலத்திலே அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்து வறட்சி நேரத்தில் பயன்படுத்திக்கொள்ளுகின்ற திட்டம் மிக முக்கியமாக இருக்கிறது. அதை அமல்படுத்தும் முறையில் மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிக்க அரசு முயற்சித்திருக்கிறதா? தயாரித்திருந்தால் எவ்வளவு விரைவில் அதை அமல் நடத்த முயற்சி செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாநாட்டிலே இயற்கை நீர் வளத் திட்டம் என்று தீர்மானம் எண் 2-லே நாம் இதை நிறைவேற்றியிருக்கிறோம். இதன்படி ஒவ்வொரு ஆற்றுப் பள்ளத்தாக்கிலும் நீரைத் திருப்பி, தேக்கி வைப்பதற்கான திட்டங்களை மாநில அரசு தயார் செய்து அதற்கு முன்னுரிமை கொடுத்து அந்தத் தண்ணீரைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலும் நாம், வறண்ட காலங்களிலே நீரைப் பயன்படுத்துகின்ற வகையில் மழைக் காலங்களிலே கிடைக்கக்கூடிய உபரியான நீரைத் தனிப்பட்ட முறையிலே புதிய குளங்களையோ அல்லது அணைகளையோ உருவாக்கி வைத்துக் கொள்வதன் மூலமாக நிலத்தடி நீரை நாம் முழு அளவிற்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. Artificial recharge செய்வதற்கு முடியும் என்று கருதி அதை மத்திய திட்டக் குழுவோடு எல்லாம் விவாதித்து அதற்கு முன்னுரிமை கொடுக்கலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். அதோடு ஒரு நீர்ப்பாசன வாரியம் ஒன்றை அமைத்து இவைகளைத் தனியாக அந்த வாரியத்தினுடைய பொறுப்பில் விடலாமா என்று அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

கோபி தொகுதி தாசம்பாளையம் பிரிவில் பாலம் கட்டும் திட்டம்

*902 வினா.—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). கோபி தொகுதியில் தாசம்பாளையம் பிரிவு எல்.பி.பி. செட் அருகில் 4/7-லிருந்து 5-ல் பாலம் கட்ட திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோபி தொகுதியில், தாசம்பாளையம் பிரிவு எல்.பி.பி. செட் அருகில் அந்தப் பாலம் இல்லாத காரணத்தினால் அங்குள்ள மக்கள் ஏறக்குறைய 10 முதல் 15 கிராமங்களிலே உள்ள மக்கள் சுமார் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் அளவிற்குச் சுற்றி வருகின்ற நிலை இருக்கிறது. எனவே, இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து அதைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தோ அல்லது பொது மக்களெல்லாம் சேர்ந்து ஏதாவது ஒரு வைப்பு நிதியை உருவாக்கிக் கொடுப்பார்களேயானால் இத்திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி பொதுப் பணித் துறை ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூத்தன் கால்வாய்த் திட்டம்

*903 வினா.—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையிலிருந்து பிரியும் கூத்தன் கால்வாயை குண்டாற்றிலிருந்து பிரியும் கூத்தன் கால்வாயுடன் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆரம்பத்தில் வைகையிலிருந்து செழுவனூர் கண்மாய் வரை கூத்தன் கால்வாய் தொடர்ச்சியாக இருந்ததா ?

(இ) கூத்தன் கால்வாய் புதுப்பிக்கப்பட்டபோது காக்கூர் கண்மாயோடு நிறுத்தப்பட்டதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) இல்லை.

(இ) கூத்தன் கால்வாய் காக்கூர் கண்மாய்க்குக் கீழே தொடர்ந்து செல்லாததினால், இக் கால்வாயைப் புதுப்பிக்கும் வேலைகள் காக்கூர் கண்மாயோடு நிறுத்தப்பட்டன.

(முற்பகல் 9-50)

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகையிலிருந்து செழுவனூர் கண்மாய் வரைதான் கூத்தன் கால்வாய் ஆரம்பகாலத்தில் இருந்து வந்தது. அதனால்தான் குண்டாற்றிலிருந்து